அன்றன்றுள்ள அப்பம்

# ஒலிவமரக் கன்றுகள்

ஜூன் – 2023 | மரம் – 2 | கன்று – 6 | ஆண்டு சந்தா ரூ.250 /- | தனிப்பிரதி ரூ.25 /- | ஆயுள் சந்தா ரூ.2500 /-




ஆசிரியர். J.ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

## சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களில்
## உருவாகும் வரைக்கும்... (கலாத்தியர் 4:19)

அன்பிற்குரிய பெற்றோர்களே, மழலைகளே, இளைஞர்களே, உங்கள் அனைவருக்கும் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஒலிவமரக் கன்றுகள் இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். பொதுத்தேர்வுகள், தேர்வு முடிவுகள், மேற்கல்வி சேர்க்கைகள், புது வேலை வாய்ப்புகள் என வாழ்வின் பல புதிய கட்டங்களில் அடியெடுத்து வைத்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

கோடை வெயிலின் தாக்கம் முடிந்து தென்றலின் துவக்கம் வீசும் காலம் இது. ஆம், அனலால் புடமிடப்படுவது வருடிக்கொடுக்கும் வாழ்வுக்கான அடித்தளம் தான். ஆகவே உங்களை சிருஷ்டித்தவரும், இந்நாள் வரை கரம்பிடித்து நடத்துபவருமான நல்ல தகப்பனும், நண்பனுமாக விளங்கும் இயேசுவை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். காரணம் அவரே உலக அறிவுக்கும், தெய்வீக ஞானத்திற்கும் திறவுகோல்.

மின்னும் வானில் விண்மீன் திரட்சியும், மினுக்கும் மின்மினி பூச்சியின் காட்சியும், கோடி கோடி கிரகங்கள் வானில் உலாவர, பாடிப் பாடி தாரகைகள் விண்ணில் வட்டமடிக்க அவருக்கு போதித்தவன் யார்?

சுற்றும் உலகம் சற்றும் அசையாதிருக்க, காற்றிடை பூப்பந்தை சுழல விட, சூரிய சந்திரனை அந்தரத்தில் தொங்கவிட, முகிலை உருவாக்கி மாரியை பொழிவிக்க அவருக்கு ஆலோசனை தந்தவன் யார்?

விவேகத்தை வளர்க்க போதித்தது யார்? விஞ்ஞானத்தை ஆராய வித்திட்டது யார்? கணிப்பொறி கண்டெடுக்க கற்பித்தது யார்? அணுசக்தி அகன்றெடுக்க ஆலோசனை தந்தது யார்?

விலங்குகளிடம் கேட்டால், விதவிதமாய் கற்பிக்குமே! பறவைகளிடம் கேட்டால், பாடி பாடி இசைக்குமே! இத்தனையிலும் தேவனின் இன்குரல் ஒலிக்கிறதே! இத்தரையில் இயற்கையின் குரல் எதிரொலிக்கிறதே! தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை. தேவனை மறைத்து மனிதன் செய்வது எதுவுமில்லை. அவருக்கு போதிப்பவன் எவருமில்லை. அவரின் ஆலோசகர் யாருமில்லை. அற்புத படைப்பனைத்தும் தேவனது யோசனை. அறிவுக்கு எட்டாதது அவரது ஆலோசனை.

உங்கள் வாழ்விற்கு உரமூட்டும், உயிரூட்டும் பதிவுகளை இவ்விதழில் இடம்பெறச் செய்துள்ளேன். வாசியுங்கள், எழுத்துக்களை நேசியுங்கள். உருமாறும்வரை தடம் மாறாமல் கிறிஸ்துவில் வீறுநடை போட உங்களை வாழ்த்துகிறேன்.

வாழ்க!



அன்புடனும், அக்கறையுடனும்:
*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# சந்தன மரம்



சந்தனம் (Santalum album) என்பது மருத்துவப் பயன்பாடுடைய ஒரு மரமாகும். இந்திய மரங்களில் மிகவும் விலையுயர்ந்த மரம் சந்தனமரம். வளர்ந்த மரம் வாசனை நிரம்பியது. தென்னிந்தியாவை தாயகமாகக் கொண்ட இம்மரம் தமிழகம், மைசூர் மற்றும் மராட்டியப் பகுதிகளில் நிறைந்து காணப்படுகிறது. திறந்த வெளிக்காடுகள், மூங்கில் நிறைந்த வனங்களிலும் பரவலாக உள்ளது. வேலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, சேலம், ஈரோடு, நீலகிரி, கோவை போன்ற பகுதிகளில் நன்றாக வளரும். சந்தன மரம் உலக விளைச்சலில் 65 சதவீதம் இந்தியாவில், குறிப்பாக கர்நாடகாவில் விளைகிறது. கர்நாடகத்தில் ஒரு குறிப்பிட்ட சுற்றளவு கொண்ட சந்தன மரங்கள் அரசுக்கு சொந்தமானவை. மேலும் சந்தன மரத்தை வனத்துறையால் மட்டுமே வெட்ட முடியும்.



சந்தன மரம் 12 முதல் 40 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. அதன் கிளைகள் எப்போதும் கீழ்நோக்கி தாழ்ந்த நிலையில் காணப்படும். சந்தனமரம் தனித்து வளராது. வேறு மரத்திற்கு அருகில்தான் வளரும். மற்ற மரத்தின் வேரிலிருந்து தனக்கு வேண்டிய ஊட்டச்சத்துகளைப் பெற்றுக் கொள்கிறது. சந்தன இலைகள் தடித்தவை. 4 முதல் 7 செமீ நீளத்தில் எதிர் எதிராக அமைந்தவை. ஆழ்ந்த பச்சை நிறமானவை. மேற்புறம் பளபளப்பாக காணப்படும். மரம் வளர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு பிறகு பழங்களை தருகிறது. மரத்தின் வைரம் பாய்ந்த நடுப்பகுதியும், வேர்களும் மிகுந்த மணம் கொண்டவையாகும்.



சந்தனம் சிவப்பு, மஞ்சள், வெண்மை என மூன்று வகைகளாக இதன் கட்டையின் நிறத்தை ஒட்டி பிரிக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று வகைக்கும் மருத்துவத் தன்மை ஒன்றுதான். வெள்ளை சந்தன மரம் மரபணு சோதனை மூலம் மட்டுமே கண்டுபிடிக்கப்படக்கூடிய சாதாரண சந்தன மரங்களுள் சிறப்பு வாய்ந்த ஒன்று. பல லட்சம் மரங்களுக்கிடையில் ஒன்று அல்லது இரண்டு மரங்கள் மட்டுமே வளரும்.



சந்தனக் கட்டையைச் சந்தனக் கல்லில் தேய்த்து அதை கோடை வெப்பத்தைத் தணிக்க மார்பில் பூசிக்கொள்வது தமிழ் மக்களின் வழக்கம் ஆகும். சந்தனக் கட்டைகள், சந்தன எண்ணெய், சந்தனத் தைலம் ஆகியவை மருத்துவப் பயன் கொண்டவை. உடல், மன ஆரோக்கியத்திற்கான மருந்துகள் சந்தனத்திலிருந்து தயாரிக்கப்படுகின்றன. சந்தன கட்டையில் சித்திர வேலைபாடுகளுக்கும், கதவுகள், புகைப்பட பிரேம்கள் ஆகிய பொருட்கள் செய்யப்படுகின்றன. மேலும் சந்தன பவுடர், சந்தன சோப்பு, கூந்தல் தைலங்கள், அகர்பத்தி மற்றும் நறுமணப் பொருட்கள் என எல்லாவற்றிலும் சந்தனத்தின் தேவை இன்றியமையாதது.



சந்தன கட்டையை எலுமிச்சம் பழச்சாற்றில் உரைத்துத் தடவ முகப்பரு, வெப்பக்கட்டிகள் ஆகியவற்றை குணமாக்கும். வெள்ளை சந்தனத்தூளுடன் நீர் சேர்த்து அதை காய்ச்சி 3 வேளை குடித்தால் காய்ச்சல், மார்புத் துடிப்பு, மாந்தம், இதயப் படபடப்பு குறையும். இதயம் வலிமை பெறும்.



நெல்லிக்காய் சாற்றை சிறிதளவு எடுத்து அதனுடன் 5 கிராம் அரைத்த வெள்ளை சந்தனத்தைக் கலந்து




உருண்டையாக்கி காலை வேளையில் சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறையும். சந்தனத் தைலத்தை சருமத்தின் மீது தடவினால் சரும நோய்கள் ஏதும் அணுகாமல் சருமத்தைப் பாதுகாக்கும். உடல் சூட்டைத் தணித்து உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

''யாக்கோபே, உன் கூடாரங்களும், இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்! அவைகள் பரவிப்போகிற ஆறுகளைப்போலவும், நதியோரத்திலுள்ள தோட்டங்களைப்போலவும், கர்த்தர் நாட்டின சந்தனமரங்களைப்போலவும், தண்ணீர் அருகே உள்ள கேதுரு விருட்சங்களைப்போலவும் இருக்கிறது'' (எண்ணாகமம் 24:5-6) இல் சந்தன மரங்களைக் குறித்து வாசிக்கிறோம்.

சந்தன மரங்கள் வாசனையை வீசி பிறருக்கு உபயோகமாக இருப்பது போன்று நாமும் பிறரது வாழ்வில் உபயோகமாய் இருப்போம்.

## நீரோடையை வாஞ்சித்து கதறும் மானுக்கு நீரோடைக்கு செல்ல வழிகாட்டி உதவுங்கள்.



# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

இயேசு அங்கிருந்து கெத்செமனே என்னும் தோட்டத்துக்கு வந்தார். அது ஒலிவமலையில் இருந்தது.

கெத்செமனே அழகான தோட்டம். தனிமையாய் ஜெபம் செய்வதற்கு உகந்த இடம். இயேசு தன்னுடன் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை அழைத்துக் கொண்டு தோட்டத்துக்குள் சென்றார். மற்ற எட்டு சீடர்களும் தோட்டத்தில் ஒரு இடத்தில் தங்கி இளைப்பாறினார்கள். யூதாஸ் மட்டும் அங்கே இல்லை.

யூதாஸ் அந்த நேரத்தில் பகைவர்களின் பாசறையில் இருந்தான்!


இயேசு கெத்செமனே தோட்டத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் ஜெபித்தபின் திரும்பி வந்து சீடர்களைப் பார்த்தார். எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள் 'தூங்காதீர்கள். விழித்திருந்து ஜெபியுங்கள். இந்த இரவு மிகவும் கடினமானது..' இயேசு சொல்ல அவர்கள் கண்களைக் கசக்கினார்கள்.

இயேசு மீண்டும் தனிமையில் ஜெபிக்கச் சென்றார். அவருடைய மனம் கடும் போராட்டத்திலும், வலியிலும் ஆழ்ந்தது.

'தந்தையே... நீர் என்னை அனுப்பிய பணியை நான் முடித்து வைக்கும் வலிமையைத் தாரும். நீர் விரும்பினால் இந்தத் துன்பத்தின் பாத்திரம் என்னை விட்டு அகன்று போகும். ஆனாலும் என்னுடைய விருப்பமல்ல, உம்முடைய விருப்பமே நிறைவேறட்டும்' இயேசு ஜெபித்தார். அவருடைய வியர்வை இரத்தத் துளிகளாய் தரையில் விழுந்து தெறித்தது. வேதனையின் பாரம் கண்களில் தெரிந்தது.

அவர் திரும்பி வந்து சீடர்களைப் பார்க்க, அவர்கள் மீண்டும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். இயேசு அவர்களை மீண்டும் எழுப்பினார்.

'என்னுடன் ஒருமணிநேரம் கூட விழித்திருந்து ஜெபிக்க உங்களால் முடியவில்லையா?' இயேசுவின் குரலில் வருத்தம் தெரிந்தது. சொல்லிவிட்டு மீண்டும் அவர் ஜெபிக்கச் சென்றார்.



ஜெபித்துவிட்டு மூன்றாம் முறையாகத் திரும்பி வந்தார். இப்போது இயேசுவின் முகம் தெளிவடைந்திருந்தது. நடக்கப் போவதை எதிர்கொள்ளும் வலிமையை அவருடைய ஜெபம் அவருக்கு வழங்கியிருந்தது. சீடர்களோ அப்போதும் தூங்கிக்கொண்டு தான் இருந்தார்கள். இயேசு அவர்களை எழுப்பினார்.

'உங்கள் மனம் வலிமையானது தான். ஆனால் உடல் வலுவற்றது. சோதனைகளைக் கடக்க வேண்டுமானால் ஜெபம் செய்யவேண்டியது மிகவும் அவசியம். சரி.. சரி... எழுந்திருங்கள். நாம் செல்ல வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. மானிட மகனைக் காட்டிக் கொடுப்பவன் நெருங்கிவிட்டான்.' இயேசு சொல்ல சீடர்கள் புரியாத முகங்களுடனும், சோர்வுற்ற இமைகளுடனும் விழித்தார்கள்.

இயேசு ஜெபிக்கத் துவங்கும் போதே சுமார் பத்து மணியளவிலேயே யூதாஸ் அன்னாவின் முன்னிலையிலிருந்து இயேசுவைக் காட்டிக் கொடுக்க புறப்பட்டான். அவனுடன் ஆறு ரோம வீரர்களும் ஒரு தலைமை வீரனும். தீப்பந்தங்களும், ஆயுதங்களும் அவர்களிடம் இருந்தன.

அவர்கள் அருகிலிருந்த தெரு வழியாக நடக்கத் துவங்கினார்கள். எங்கும் நிசப்தம். வீரர்களின் காலடி ஓசை தவிர எதுவும் தெருவில் நடமாடவில்லை. சிறு சிறு ஒற்றையடிப் பாதைகளில் புகுந்தும், வளைவான பாதைகளில் கவனமாய் நடந்தும் அவர்களுடைய பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது. சீலோவாம் குளத்தருகே அவர்கள் வந்தார்கள். வாயில் காவலனிடம் விழிப்பாய் இருக்கும்படி தகவல் அளித்துவிட்டு அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

நகர எல்லைக்கு வெளியே இருந்த தோட்டத்தை நோக்கி யூதாஸ் அவர்களைக் கூட்டிக் கொண்டு போனான். கூட வந்த வீரர்கள் குழம்பினார்கள். இந்த இரவு வேளையில் இயேசு தோட்டத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறார். பேயோட்டுகிறாரா அல்லது ஏதேனும் மந்திரம் தந்திரம் பழகுகிறாரா? பேய்களுடன் உரையாடுகிறாரா? என்ன தான் செய்கிறார் என்று தங்களுக்குள்ளேயே விவாதித்துக் கொண்டார்கள்.

பயணம் கேத்ரோனை வந்தடைந்தது. அங்கிருந்து ஒலிவமலை நோக்கி வீரர்களை வழி நடத்தினான் யூதாஸ். வீரர்கள் இயேசுவைப் பற்றியும் அவருடைய அதிசயச் செயல்களைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்ததால் கொஞ்சம் பயந்தார்கள். யூதாஸ் அவர்களுக்கு தைரியமூட்டினான். கவலைப்படாதீர்கள். இயேசு நமக்காகக் காத்துக் கொண்டிருப்பார். அவரே சொல்லியிருக்கிறார் எதிரிகளிடம் கையளிக்கப்படுவேனென்று. எனவே எந்த பிரச்சினையும் இன்றைக்கு நடக்காது கவலையை விடுங்கள்.

அங்கிருந்து கெத்செமனே தோட்டத்தை நோக்கி யூதாஸ் நடந்தான். அமானுஷ்ய நிசப்தத்தை அவனுடைய பையில் இருந்த வெள்ளிக்காசுகளின் முனகல் சற்று விலக்கியது. கெத்செமனே தோட்டத்தை நெருங்குகையில் யாரோ பேசிக்கொண்டிருக்கும் சத்தம். அது இயேசு தான். இயேசு இந்த இரவில் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்!

யூதாஸ் திரும்பினான். இன்னும் சற்று நேரத்தில் இயேசு இருக்கும் இடத்துக்குச் சென்று சேரலாம். அங்கே சீடர்களும் இருப்பார்கள். நான் யாரை முத்தமிடுகிறேனோ அவர் தான் இயேசு. நீங்கள் பிடித்துக் கொள்ளுங்கள். யூதாஸ் சொல்ல வீரர்கள் தலையாட்டினார்கள்.

யூதாசும், வீரர்களும் இயேசு இருந்த திசை நோக்கி நடந்தார்கள். அதற்குள் இயேசு ஜெபத்தை முடித்துவிட்டு தூங்கிக் கொண்டிருந்த சீடர்களை எழுப்பிக் கொண்டிருந்தார்.

யூதாஸ் ஒரு புன்னகையுடன் அவர்களுக்கு முன்னால் சென்று நின்றார். இயேசு அவனைப் பார்த்தார். இயேசுவின் பார்வை அந்த இரவிலும் பளீரடித்தது.

‘ரபி... நீர் வாழ்க’ யூதாஸ் புன்னகையுடன் இயேசுவைக் கட்டிப்பிடித்து அவருடைய கன்னத்தில் முத்தமிட்டான். இயேசு அவனை இறுக அணைத்துக் கொண்டார்.

‘தோழா... முத்தமிட்டா மனுமகனைக் காட்டிக் கொடுக்கிறாய்?’ இயேசு கேட்க யூதாஸ் திடுக்கிட்டான்.

‘நீங்கள் யாரைத் தேடி வந்திருக்கிறீர்கள்?’ இயேசு படைவீரர்களைப் பார்த்துக் கேட்டார்.

‘இ...இயேசுவை’ அவர்கள் சற்று உதறலுடன் பதில் சொன்னார்கள்.

‘நான் தான் அவர்.’ இயேசு சொன்னதும் அவருடைய குரலில் இருந்த உறுதியைக் கண்ட படை வீரர்கள் பின் வாங்கினார்கள்.

‘என்னைத் தானே தேடி வந்திருக்கிறீர்கள். வாருங்கள். என்னைப் பிடிப்பதற்கு எதற்கு இத்தனை வாள்கள், தீப்பந்தங்கள், படை வீரர்கள். நான்தான் தினமும் கோயிலில் போதித்து வருகிறேன், மக்களோடு உரையாடுகிறேன். வாருங்கள் கைது செய்யுங்கள்’ இயேசு சொல்ல படைவீரர்கள் மீண்டும் தயங்கினார்கள். இயேசு ஏதேனும் செய்து தங்களைக் கொன்று விடுவாரோ என்று படைவீரர்களுக்குள் பயம்.

யூதாஸ் அந்தக் கூட்டத்தை விட்டு மெல்ல நழுவினான்.

படைவீரர்களோடு வந்திருந்த தலைமைக் குருக்கள். ‘பிடியுங்கள் அவனை... ஏன் தயங்குகிறீர்கள்’ என்று சொல்லி படைவீரர்களைத் தூண்ட படைவீரர்கள் முன்னே சென்று இயேசுவைப் பிடித்தார்கள்.

அவ்வளவுதான் இயேசுவுடன் இருந்த ஒரு சீடர் தன்னுடைய வாளை உருவி ஒரு படைவீரனின் காதை வெட்டினான். வெட்டப்பட்டக் காது தரையில் தெறித்துப் போய் விழுந்தது. படைவீரன் வலியில் துடித்தான். இயேசுவின் சீடர்கள் அனைவரும் வினாடி நேரத்தில் ஒரு சண்டைக்கு ஆயத்தமானார்கள். படைவீரர்களும் தங்கள் வாள்களை உருவினார்கள்.

இயேசுவோ அந்தச் சீடரைக் கடிந்து கொண்டார். அவர் போருக்குத் தயாராக இல்லை.

‘உன் வாளை உறையிலே போடு. வாள் எடுப்பவன் வாளால் மடிவான். இவர்களைத் தாக்க வேண்டுமென்று தான் தந்தையிடம் சொன்னால் வினாடி நேரத்தில் இவர்களைத் தவிடு பொடியாக்கும் படையை அவர் எனக்குத் தருவார். நிகழ வேண்டியவை நிகழத்தான் வேண்டும்.’ என்று சொல்லிய இயேசு, அந்தக் காதை எடுத்து வெட்டுப்பட்ட இடத்தில் வைக்க அது ஒட்டிக் கொண்டது.

படைவீரன் அதிர்ந்தான். கொலைசெய்வதற்காக வந்தோம் என்று தெரிந்தும் கூட இயேசு தன்னைக் குணமாக்கினாரே என்பதை நினைக்க நினைக்க அவன் உள்ளுக்குள் கூனிக் குறுகினான்.

மற்ற படை வீரர்கள் எல்லோருமாகச் சேர்ந்து இயேசுவைப் பிடித்துச் சங்கிலியால் பிணைத்தார்கள்.

இயேசு பிடிபட்டதைக் கண்ட சீடர்கள் சிதறி ஓடினார்கள். ஒரு படைவீரன் ஓடிக்கொண்டிருந்த சீடரின் ஆடையை எட்டிப்பிடிக்க அவன் ஆடையை அவிழ்த்துவிட்டு நிர்வாணியாகவே இருட்டுக்குள் ஓடினான். படைவீரர்கள் அவர்களைத் துரத்தினார்கள். மரித்தாலும் உம்முடன் வருவேன் என்று சொன்ன பேதுருவையும் அங்கே காணவில்லை!

பேதுருவும், யோவானும் தலையில் முக்காடிட்டுக் கொண்டு தூரத்தில் நின்று இயேசுவை என்ன செய்கிறார்கள் என்று பதட்டம் வடியும் கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தொடரும்...

# கழுகு

''உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது'' (சங்கீதம் 103:4,5).

கழுகுகளில் மொத்தம் 74 இனங்கள் உள்ளன. உலகம் முழுவதும் கழுகுகள் பரவலாகக் காணப்படுகின்றன. பெரிய கண்களும் கூரிய நுனியுடைய வளைந்த அலகும், வலுவான உகிர்களைக் (உகிர் = நகம்) கொண்ட கால்களும், அகண்டு நீண்ட இறக்கைகளும் உள்ளன. கழுகுகள் தன்னுடைய உணவின் அடிப்படையில் மற்ற பறவைகளிலிருந்து வேறுபடுகின்றன. பெரிய உடல், வலுவான அலகு, வலிமையான தசைகளையுடைய கால்கள் போன்றவற்றாலும் வேறுபடுகின்றன.

கழுகு உயரமான மரங்கள், மலைச்சரிவுகளில் கூடு கட்டுகின்றன. மனிதனுக்கு கைகளில் எவ்வளவு பலம் இருக்கிறதோ, அதே பலம் கழுகுக்கு கால்களில் இருக்கிறது. இவை தங்கள் உணவினை வேட்டையாடி, அலகால் அவற்றின் சதைப் பகுதியைக் கொத்தி உண்கின்றன. இவை உயரமாகப்பறந்து வட்டமாகச்சுற்றி இரையை தேடுகின்றன. இவைகளின் கண் மிகவும் கூர்மையானது. மிக அபாரமான பார்வைத் திறனைக் கொண்டுள்ளன. இது மிகத் தொலைவிலிருந்து உணவினைக் கண்டுபிடிக்க உதவுகிறது. மேலிருந்து இரையை கண்டால் மிகவும் வேகமாக கீழிறங்கி, இரையை தனது கால்களில் இடுக்கி தூக்கிச்சென்று உண்ணும். மிக உயரத்திலே பறந்தாலும், விமானத்தைவிட உயரமான தூரத்தில் இருந்தே, தனது இரையை கண்டுகொள்ளும். தரையில் நகரும் எலி, கோழிக்குஞ்சு போன்ற சிறு விலங்குகளைக் கண்டால், சடார் என்று கீழே பாய்ந்து தம்



வல்லுகிரால் கவ்விக் கொண்டு போய் கொன்று உண்ணும். இதன் சராசரி வேகம் 150 கி.மீ. இது இரைக்காக மேலிருந்து கீழே பறந்து வரும் வேகம் கிட்டத்தட்ட 200 கி.மீ.

கழுகின் ஆயுசு நாட்கள் 40 ஆண்டுகள், ஆனால் தன் வைராக்கியத்தினால் 70 ஆண்டுகள் உயிர் வாழும். கழுகு 40 வயதை அடையும் போது அதிக கொழுப்பும், எடையும் கூடி தன் பலத்தை எல்லாம் இழக்கும். தான் பலவீனப்பட்ட அந்த சூழ்நிலையில் ஒரு முடிவு எடுக்கும். அந்த முடிவு என்னவென்றால் ''இனி வாழ்வதா? சாவதா?''

மிகக்கடுமையான தீர்மானத்துடன் ஒரு மலையின் உச்சிக்கு சென்று ஒரு கூட்டில் 5 மாதம் கிட்டத்தட்ட 150 நாள் அங்கு இருக்கும். அச்சமயத்தில் தன் அலகை பாறையில் கொத்தி கொத்தி உடைத்துவிடும். கொஞ்ச நாட்கள் கழித்து அலகு வளர ஆரம்பிக்கும். வளர்ந்ததும், தன் கால்களின் நகத்தை தன் புதிய அலகால் உடைத்துவிடும். அது புதிதாக முளைத்து வளர்ந்தவுடன் நகத்தால் தன்னுடைய இறக்கையின் சிறகையெல்லாம் பிடுங்கி விடும். பிறகு அதுவும் முளைத்து தன் எடை குறைத்து எல்லாம் புதியதாக மாறி இன்னும் இளமையாக 30 ஆண்டுகள் புதிய பலத்துடன் உயிர் வாழுமாம். அதற்காக 150 நாட்கள் கடுமையான பயிற்சி எடுக்கிறது.

ஒரு கழுகே இப்படி வைராக்கியமாக இருந்து சாதித்தால் தேவ பிள்ளைகளாகிய நம்முடைய வைராக்கியம் எங்கே?

பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. ''கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து; கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள் நடந்தாலும் சோர்ந்து போகார்கள்'' (ஏசாயா 40:31). வாழ்க்கையில் நமக்கும் சில நேரங்களில் வாழ்வா? சாவா? என்பது போல போராட்டத்தின் சூழ்நிலைகள் வரலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் கழுகைப்போல, நாம் கர்த்தருடைய பாதத்தில் வைராக்கியத்தோடே காத்திருக்கிறவர்களாக இருப்போமானால் நிச்சயமாகவே, புதுபெலனை பெற்று நமக்கு எதிரான எல்லாவற்றையும் எளிதாக மேற்கொள்வோம். வெற்றியோடு வாழ்வோம்.




கிறிஸ்துவின் பணியில் ஆதரவு கரம் நீட்ட விரும்பினால் காசோலை (Cheque) அல்லது வரைவோலை / கேட்புக் காசோலை (D.D.) கீழ்க்கண்ட பெயரில் எடுத்து, எங்களது அலுவலக முகவரிக்கு பதிவஞ்சல் (Register Post) / தூதஞ்சலில் (Courier) அனுப்புங்கள். கூடுதல் தகவலுக்கு:

**✆ 9003067777**

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | **ANTANTULLA APPAM TRUST** |
| ACCOUNT NO. | : | 048 201 000 010 247 |
| BANK NAME | : | **INDIAN OVERSEAS BANK** |
| IFSC CODE | : | IOBA0000482 |
| SWIFT CODE | : | IOBAINBB001 |
| BRANCH & CODE | : | MAHALINGAPURAM BRANCH & 482<br>CHENNAI - 600 034. |

G Pay **98406 95296**

# மான்

மான் பாலூட்டி வகையைச் சேர்ந்த ஒரு காட்டு விலங்கு. செர்விடீ (Cervidae) இனத்தைச் சேர்ந்தது. மான்கள் இலை தழைகளையே முதன்மை உணவாக உட்கொள்கின்றன. துளிர்கள், புற்கள், பழங்கள் போன்றவற்றையும் உண்கின்றன. ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகாவைத் தவிர அனைத்து கண்டங்களிலும் மான்கள் உள்ளன. மான்கள் மலைப்பகுதிகள் முதல் சூடான மற்றும் ஈரமான மழைக்காடுகள் வரை பல்வேறு வாழ்விடங்களில் வாழும். பார்பரி சிவப்பு மான் ஆப்பிரிக்காவில் இருக்கும் ஒரே மான் இனமாகும். பார்ப்பதற்கு மிகவும் சாதுவாக இருக்கும்.

மான்களில் புள்ளி மான், கவுரி மான், துருவ மான், சதுப்பு நில மான், சருகு மான், சாம்பார் மான், சிவப்பு மான், பூட்டான் மறிமான், ஆப்பிரிக்க மறிமான், இந்தியச் சிறுமான், இலங்கைப் புள்ளிமான், காட்டுமான் என 60-க்கும் அதிகமான மான் வகைகள் உள்ளன.

கனடாவிலும் சைபீரியா முதலிய வடநிலப் பகுதிகளிலும் வாழும் மூசு (Moose) அல்லது எல்க் (Elk) என்னும் காட்டுமான் தான் உலகிலேயே மிகப்பெரிய மான் இனமாகும். இவற்றின் ஆண் மூசு, 2 மீட்டர் உயரமும் 540 - 720 கிலோ எடையும் உள்ள மிகப்பெரிய விலங்காகும்.

மான்களில் பொதுவாக ஆண் மான்கள் மட்டுமே அழகான கொம்புகளைக் கொண்டிருக்கும். ஆண்மானுக்கு ''கலை'' என்று பெயர். பெண்மானுக்குப் ''பிணை'' என்று பெயர். மானின் குட்டிக்கு ''மான்மறி'' என்று பெயர்.



விலங்கியல் ஆய்வுகளின்படி மானின் தலையில் இருப்பது கொம்புகள் என்று கூறப்பட்டாலும், அவை எலும்புகளின் நீட்சியே ஆகும். தலையின் எலும்பு வெளியே நீண்டு வளரும் ஒரே விலங்கு மான் ஆகும். மானின் கொம்புகள், ஆண்டுதோறும் விழுந்து புதிதாக முளைக்கும். முதல் ஆண்டில் கிளை இல்லாமல் இருக்கும். பிறகு ஆண்டுதோறும் விழுந்து புதிய கிளைகளுடன் முளைக்கும். மானின் வயது அதிகமாகும்போது கிளைகளும் அதிகமாகும். கொம்பு விழுந்த மான் புதுக்கொம்புகள் முளைக்கும் வரை எதிரிகளின் பார்வையில் படாமல் காட்டில் மறைந்தே வாழும்.

மான் ஒரு குட்டியை ஈன்றெடுக்க 10 மாதங்கள் ஆகும். ஒரு குட்டி அல்லது இரண்டு குட்டிகளை பெற்றெடுக்கும். மான் 20 முதல் 30 ஆண்டுகள் வரை உயிர் வாழ முடியும். இனங்களை பொறுத்து வேறுபடும். பிற விலங்குகள் வேட்டையாடுதல், இயற்கை பேரழிவு போன்ற காரணங்களால் மானின் ஆயுட்காலம் குறைகிறது.

''மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது'' (சங். 42:1,2).

42ஆம் சங்கீதம் ஆவிக்குரிய தாகத்தை அடிப்படையாகக்கொண்டு இயற்றப்பட்டுள்ளது. மான்கள் நீரோடையை வாஞ்சித்து கதறுவது போல தாவீதும் வனாந்தரத்தில் இருக்கையில் மான்களைப்போல தேவபிரசன்னத்தை வாஞ்சித்துக் கதறினார். தாவீதும் அவனோடு சேர்ந்தவர்களும் ஆசரிப்பு கூடாரத்தைவிட்டு விலகி இருக்கும்படியான ஒரு சூழ்நிலையில் இந்த சங்கீதம் இயற்றப்பட்டுள்ளது. சங்கீதக்காரன் ஆண்டவர் மேலுள்ள தன்னுடைய ஏக்கத்தை, தன்னுடைய தாகத்தை மான்கள் நீரோடையை வாஞ்சித்து கதறுவத்தற்கு ஒப்பிடுகிறான்.

## மான்களின் தாகம்

மான்கள் தன்னை வேட்டையாட முயற்சிக்கும் பெரிய விலங்குகளிடமிருந்து மிக வேகமாக ஓடி தன்னை தப்புவித்து கொள்கிறது. வேகமாக ஓடுவதால் அதற்கு தாகம் ஏற்படுகிறது. கோடைகால வெப்பத்தினாலும் மான்களுக்கு தாகமெடுக்கிறது. இந்த சூழ்நிலைகளினால் பெலவீனப்பட்ட மான், இழந்த பெலனை திரும்பவும் பெறுவதற்காக, தண்ணீருக்காக நீரோடைகளைத்தேடி ஏங்கித்தவித்துக் கதறுகிறது. வெயில் நேரங்களில் காட்டுப்பகுதிகளில் செல்லும்போது, மான்களின் கதறுதல் கேட்கப் பரிதாபமாய் இருக்கும்.

பெலவீனப்பட்ட மான், தண்ணீரை கண்டுபிடித்து அதை குடிப்பதினால் சோர்வு நீங்கி, புது பெலன் அடைகிறது. உங்கள் கதறுதல் தேவனுக்காக, தேவ பிரசன்னத்திற்காக, அவருடைய மகிமையைக் காணவேண்டும் என்ற ஏக்கத்தோடு இருக்கவேண்டும். மான்களைப் போல நீங்கள் எதையும் தேடி திரியவேண்டியதில்லை. ஜீவ தண்ணீராம் நம் தேவன் நமது அருகாமையிலே இருக்கிறார்.

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார் (சங்கீதம் 145:18).

சமீபமாய் இருக்கிற நம் தேவன் நமது எல்லா தேவைகளையும் சந்திக்க வல்லவராய் இருக்கிறார். உலக வாழ்க்கையை வெற்றிகரமான வாழ்க்கையாய் வாழ ஆண்டவரின் பேரில் தாகமாய் இருப்பது அவசியமாயிருக்கிறது.

# மனிதப் பிறவி

''மனிதனுக்கு மிகவும் கடினமானது மனிதனாவதுதான்'' இப்படியொரு கவிதை.

'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்பர். உண்மையில் மானிடராய்ப் பிறத்தல் எளிது! மனிதனாக வாழ்ந்து சிறப்பதுதான் கடினம்!

'மனிதன் ஒரு சமூகப் பிராணி' என்று முதல் தத்துவார்த்தம் சொன்னது கிரேக்கம். மனிதன் என்ற அரபுச் சொல் 'இன்சான்' என்பது இதன் பொருள் 'உறவு கொள்பவன்' என்பதாகும்.

உயிரினங்களில் பல கூடி வாழும் இயல்பு கொண்டவை என்றாலும்கூட, உணர்வுப் பூர்வமாகக்கூடி வாழ்வதில்லை. மனிதன் மட்டுமே உணர்வுப்பூர்வமாக பிறருடன் உறவு கொள்பவன். நட்புக் கொள்பவன். தோழமை கொள்பவன்.

இரத்த உறவை உறுப்படுத்தியும், புதிய நட்பு உறவை ஏற்படுத்தியும், பிற மனிதர்களை நேசிக்கும் மனோபாவமே மனித இலட்சணம். இதுதான் மனிதனின் பெருமை.

சக மனிதர்களை நேசிக்காதவன் மனிதனே அல்ல. நேசம் பகிர்ந்து உறவு பாராட்டி வாழ்ந்து சிறந்தால் மட்டுமே அது மனித வாழ்க்கை எனப்படும்.

நேசத்தின் வாசம் துளியும் இல்லாதவர்கள் 'இவனெல்லாம் ஒரு மனுசனா? இதெல்லாம் ஒரு மனிதப் பிறவியா?' என்று இகழப்படுவதை, சமுதாய நிராகரிப்பு செய்யப்படுவதை எப்போதாவது பார்த்து வருகிறோம்.

குடும்பம், மனைவி, மக்கள் என்ற சிறிய எல்லையை கடந்து பரந்து விரிந்த விசாலமான உறவாகக் கருதப்படுவது 'நட்பு' என்பதே. மனிதன் மகிழ்ச்சியும் நிம்மதியும் சுதந்திரமும் அனுபவிப்பது காதலிலும் நட்பிலும்தான். உடலைப் பகிர்ந்து கொள்வதைத் தவிர நட்பிற்கும் காதலுக்கும் வேறுபாடு ஏதுமில்லை.

இடுப்பு வேட்டி நழுவும்போது உடனே துரிதமாய் சரிசெய்ய விரையும் கைகள் போல, பிறர் துயர் கண்டவித்து உதவுவது நட்பு என்கிற வள்ளுவப் பெருந்தகையின் நட்பிலக்கணத்திற்கு மேலும் சில தகுதிகள் நட்பிற்கு உண்டு.



வள்ளுவனார் கூற்றைச் சிலர் தவறாகப் பொருள் கொள்வதுண்டு. அதாவது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பவர் மட்டும்தான் நல்ல நண்பர் என்று அர்த்தப்படுத்திக் கொள்ளாமல் நம் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று விரும்பிச் செயல்படுபவரும் நல்ல நண்பரே என எண்ணிக் கொள்ளலாம்.

உண்மையில பிரச்சினை வரும்போது விரும்பி வந்து காக்கும் மனோபாவம் மனித நேயம் மட்டுமே. நட்புக்கு இந்த மனித நேயம் அடிப்படைப் பண்பு எனலாம்.

நண்பர்களை உருவாக்க முடியாது. நட்பையும் உருவாக்க முடியாது. பரிச்சயமானபின், பகிர்ந்தலும் பாசாங்குகள் இல்லாத பழக்கமுமே நட்பை உருவாக்கும்.

நட்பு அறிவுப்பூர்வமான ஆய்வின் அடிப்படையில் நிகழும் தேர்வு அல்ல. அது உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து இயல்பாய்ப் பொங்கிப் பெருகும் ஆத்மார்த்த உணர்வு.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத மனவலிமையும் முதிர்ச்சியும் தெளிவும் இருந்தால், இயல்பாய் மனதாரச் சிரிக்க முடிந்தால், பிறருக்கு வலிக்காமல் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதைக் கற்றுக் கொண்டால் நட்பு எல்லை விரியும்.

நட்பு என்பது இருவர் ஒருவரை நோக்கி ஒருவர் இனிதாய் எதிர்கொள்ளும் தொடர்பு, மதிப்பு, இரசிப்பு. இவை சில நண்பர்களிடையே இருந்தாலும் சமநோக்கில் உரையாடவும், உறவாடவும் முடிபவர்களிடையேதான் நட்பு உருவாகவும் வளரவும் முடியும்.

உங்களுக்கு நண்பர்களை வளர்த்துக் கொள்ள விருப்பமா? அதற்கு அடிப்படை, நீங்கள் ஒரு நல்ல நண்பராக இருப்பதுதான்.

நண்பர்களுக்கிடையில் தூர இடைவெளி இருந்தால் - வேறு நாடு, வேறு மாநிலம், வேறு ஊர் - நட்பு மங்கிவிட வாய்ப்பு உண்டு என்பர். இத்தொலைத் தொடர்பு யுகத்தில் இது தவறான கூற்றே. ஒருவேளை கால இடைவெளி நட்பை மங்கச் செய்யலாம். நட்பு மங்கிப் போகலாம்; மீண்டும் வளம் பெறலாம். ஆனால், நட்பில் பிரிவு ஏற்படுவது என்பது துரதிர்ஷ்டமானது.

நட்பில் பிளவும் பிரிவும் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் பொய். பொய் என்பது உண்மையைத் திரித்து, மாற்றிச் சொல்வது மட்டுமன்று. உண்மையை மறைத்து ஒப்பனை செய்வதும் பொய்தான்.

நெருக்கமாய் இருக்கும் உறவில் பேதம் இருக்காது. பேதம் வரும்போது மற்றவர் சொல்வதும் செய்வதும் நமக்கு ஒத்துவராது என்பது மட்டுமன்று. அதற்கு அவர்கள் கூறும் நியாயமான காரணங்கள் நம் மனத்தில் பதியாது.

நெருக்கமாய் ஆரம்பித்து, தொடர்ந்து வளர்ந்து வரும் உறவுகளில் கூடத் திடீரென்று ஒரு சின்ன செயலுக்காகப் பிளவு ஏற்படுவதுண்டு. இதற்கு அடிப்படைக் காரணம் முதிர்ச்சியின்மை, கோபம், மகிழ்ச்சி போன்ற செய்திகள் அந்த நாளோடு, அந்தப் பொழுதோடு முடியக்கூடியவை. அவற்றைத் தொடர்ந்து இழுத்து மறுநாளுக்கும் தூக்கிச் சுமக்கும்போதுதான் குழப்பம் உருவாகும். இன்று இந்தச் செயலுக்காக அதே ஆள் மீது மரியாதையும் வரும். நேற்றைய கோபத்தால் இன்றைய நல்லதையும் மறுக்க நேர்ந்தால் மனம் வெம்பிவிடும். மன வளர்ச்சியின் அடையாளம் முதிர்ச்சிதான். முதிர்ச்சியின் அடையாளம் ஒவ்வொரு செயலையும் நிகழ்வையும் தெளிவாகப் பார்க்கத் தெரிந்து கொள்வதுதான். முதிர்ச்சி இல்லாத நெருக்கம் ஓர் உறவைத் தக்கவைக்கவோ, தொடரவைக்கவோ முடியாது!

# பெற்றவர்களே!

'தான் யார்?' என்று தொடர்ந்து சூழலும், சந்தர்ப்பங்களும் சொல்லிக் கொண்டிருந்தாலும், 'தெரியாது' என்றும், 'தெரிந்து கொள்ளத் தேவையில்லை' என்றும் திரிய முயல்வதுதான் மனத்தின் இயல்பு. தேடுதல் நிகழும் போது முட்கள் இரணம் கூட்டலாம். தேடுதல் நின்றால் வலியில்லை. எனவே, வேதனைக்குப் பயந்து தேடுதலை நிறுத்துவது சரியன்று.

சும்மாயிருந்தாலும் கேள்விகள் வரும். இதற்குப் பின் என்ன? இதற்கு முன் ஏன்? இப்போது ஏன் இப்படி? என்ற கேள்விகள் வந்தால் சும்மாயிருப்பது சுகமாக இருப்பதில்லை என்பது விளங்க ஆரம்பிக்கும். உண்மையிலேயே சும்மாயிருக்க முடியாதா? முடியும். சும்மாயில்லாமல் உண்மையைத் தேடினால் தரிசனத்தில் வரமாக வரும் அமைதியில் சும்மாயிருக்க முடியும்.

குழந்தை பிறந்தவுடன் அமைதியாக இருக்கிறது என்பது பல நேரங்களில் ஆபத்தின் அறிகுறி. பிறந்தவுடன் அழவேண்டும். பசிக்குப் பால் அருந்த வேண்டும் என்றேதான் பிரசவிக்கப்பட்ட குழந்தையின் நலம் தீர்மானிக்கப்படுகிறது. அழாமல் பிறந்து அப்படியே கிடந்தால் குழந்தையன்று. சும்மாயிருப்பது என்பது செத்ததாக ஆகிவிடக் கூடாது. சும்மாயிருக்குமுன் சுகங்களைப் போலவே வலிகளையும் அனுபவித்தாக வேண்டும். அனுபவிக்க மறுத்து, அனுபவங்களைத் தவிர்த்து, அறிவைப் பூட்டி வைத்து அப்படியே இருந்து விடலாம் என்றால் - அதைவிட இறந்து விடலாம். அந்தக் கட்டத்தில் இரண்டும் ஒன்றுதான்.



வாழ்ந்து சரியென்று நம்பினால் வாழ்வது எப்படி என்று சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. இதுவரை வாழ்ந்ததைவிட இன்னும் சிறப்பாக வாழ விரும்பினால் அந்த விருப்பமே கடந்த காலம் குறித்த திருப்தியின்மையைக் காட்டும். இனியும் இப்படித்தான் வாழ்க்கை என்று முடிவெடுத்

தாலும் அது நம்பிக்கையின்மையைக் காட்டும். வாழ்க்கை எப்படி என்ற கேள்வியைக் கேட்குமுன், வாழ்க்கை என்ன என்பது விளங்க வேண்டும்.

வாழ்க்கை எல்லோருக்கும் எப்போதுமே தானாக இருப்பதுதான். மகிழ்ச்சியை நுகருமளவுக்கு, ஆனந்தங்களை அனுபவிக்கும் அளவுக்கு மனம் இறுக்கமில்லாமல் இயங்குவதுதான் வாழ்க்கை. தோல்விகள், வருத்தங்கள், தடைகள், தொந்தரவுகள், தடுமாற்றங்கள் என்று எத்தனை வந்தாலும் தொடரும் திறன்தான் வாழ்க்கை. இந்தச் செயலைச் செய்ய முடியவில்லை, எனவே எந்தச் செயலையும் செய்ய இயலாது.

சாதனையாளனாக மட்டுமன்றிச் சராசரியாகக் கூட இருக்க முடியாது. ஒரு தோல்வியால் துவளக்கூடாது என்பது மட்டுமன்று. ஒவ்வொரு சந்தோசத்தையும் அனுபவிக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை தொடரும். தோல்விகள் முடிவுரையல்ல என்று தேற்றுவது அறிவுதான். வெற்றிகளும் முகவுரை அல்ல என்று சில சமயம் எச்சரிக்கும். இதை மீறி இயங்குவது வாழ்க்கை.

அனுபவிக்காதவரை எதுவுமே புதிர்தான். வலியை அனுபவித்துவிட்டால்தான் அதன் வீச்சு புரியும். சில வலிகளைத் தாங்க முடியும் என்ற நம்பிக்கை எப்படி வருகிறதோ, அதைப் பொருத்தே செயல்முறைகளைப் பரிசோதிக்க இயலும். நீர் நிரப்பிய குடத்தைத் தூக்கினால் இடுப்பு வலிக்கும். அந்த வலி பெரிதல்ல – குடத்து நீர் குடும்பத்துக்கே உணவு கொடுக்க உதவும் என்றால், வலியைவிட காரியம் பெரிதாகும். போகப்போக இப்படிப்பட்ட வலிகளும் ஞாபகத்திலிருந்து காணாமல் போகும்.

மகிழ்ச்சியைக் கூட மனம் முழுமையாக அனுபவிக்கத் தயங்குவதன் காரணம் அச்சம். வலிகளைத் தாங்கிச் செயல்களைத் தொடர எப்படி நம்பிக்கைதான் காரணமோ, அதேபோல மகிழ்ச்சியைக் கொண்டாடிவிட்டால் மறுநாள் வாழ்வதே தகர்ந்து விடுமோ என்ற பயமே, எளிதாய்க் கிடைக்கும் பல இனிய சுகங்களையும் அனுபவிக்காமல் இருக்கக் காரணம் நாளை என்பது பொதுவாக நம்பிக்கைதான், நேற்று என்பது சீராக இருக்கும்வரை, நாளை நம்பிக்கையற்றதாய் ஆகும்போது, இன்று எதுவும் இனிக்காது. ஒருவிதத்தில் நம்பிக்கைதான் வாழ்க்கை.

அவ நம்பிக்கை எப்படி உண்மையை மறுக்குமோ, அதேபோல் மூட நம்பிக்கை பொய்யை ஏற்கும். தானே தன்னை நம்புவதுதான் தைரியம். ஒரு விதத்தில் தைரியம்தான் வாழ்க்கை.

வலி தடை விதிக்கும் என்பது போலவே சுகமும் ஊக்குவிக்கும். வலிகளைத் தவிர்ப்பது போலவே சுகங்களை நாடுவதும் வாழ்க்கைக்கு அவசியம். ‘பின்வாங்குவதா?’ ‘முன்னேறுவதா?’ என்று எண்ணுவது இப்போது நிகழும் யுத்தத்திற்குச் சரியான யுக்தி என்று தீர்மானிப்பது தான் அறிவு. அறிவு அனுபவத்தின் விளைவு.

அனுபவம் நிகழ்ந்ததை ஆராய்ந்து நிகழப்போவதைக் கணிக்கும் நிதானம். இந்தக் கோணத்தில், அனுபவம்தான் வாழ்க்கை. அது தரும் அறிவுதான் வாழ்க்கை. அறிவு நாடும் சுகம்தான் வாழ்க்கை. சுகம் வரும் என்ற நம்பிக்கைதான் வாழ்க்கை. நம்பிக்கை உருவாக்கும் தைரியம்தான் வாழ்க்கை.

‘தன்னால் முடியாதோ?’ என்ற எண்ணத்தால் முதலில் அச்சம் வரும். ‘தன்னால் முடியாது’ என்று தீர்மானித்தால் வருத்தம் வரும். வருத்தப்படும் அளவு வாழ்வதா என்று எண்ணினால் கோபம் வரும். கோபம் மேலும் சிந்திக்கவிடாமல் அறிவை மழுங்கடிக்கும். வாழ்க்கையை நிதானமாக்க, நிம்மதியாக்க, சுகமாக்க முதலில் அச்சத்தைத் தவிர்க்க வேண்டும்.

# உன் பிள்ளை ஆபேலா? காயீனா?

நீ வளர்க்கும் பிள்ளை காயீனா? அல்லது ஆபேலா? ஓர் உயர்தரமான மகன் அல்லது மகள் தற்செயலாக உருவாவதில்லை. அப்படிபட்டப் பிள்ளையின் பின்னால் மறைந்திருப்பது பெற்றோரின் கரிசனை, அக்கறை, முயற்சி, ஜெபம்.

## காயீனை உருவாக்குவது எப்படி?

1. பிள்ளை கேட்பதை எல்லாம் கொடு.
2. கெட்ட வார்த்தையைப் பேசும்போதுச் சிரித்து மகிழ்.
3. ஆவிக்குரிய பயிற்சி அளிக்காதே. 21 வயதில் அவனே தெரிந்துகொள்ளட்டும்.
4. தவறு செய்யும்போது அதைச் சுட்டிக்காட்டாதே.
5. அவனுடைய வேலைகளையெல்லாம் நீயே செய்.
6. அவன் எதையும் வாசிக்கவிடு. (கணிப்பொறியில் எதையும் பார்க்கட்டும்!)
7. பிள்ளைகளுக்குமுன் கணவனுடன் சண்டை போடு.
8. பணம் கேட்கும்போதெல்லாம் கொடு.
9. அவனுக்கு எதையும் மறுக்காதே.
10. மற்றவர் குறை கூறும்போது மகனுக்கு இசைந்து பேசு.
11. அவன் சச்சரவில் மாட்டிக்கொள்ளும்போது, அவன்மேல் எனக்கு எந்த அதிகாரமுமில்லை எனக் கையை விரித்துவிடு.
12. கண்ணீரின் வாழ்க்கைக்கு உன்னை ஆயத்தப்படுத்திக்கொள்.

## ஆபேலை உருவாக்குவது எப்படி?

1. கிறிஸ்தவ வாழ்க்கையைக் கற்றுக்கொடு - நீதிமொழிகள் 22:6.
2. தேவையானபோது தண்டனை கொடு - நீதிமொழிகள் 22:15.
3. முன்மாதிரியாக வாழ்ந்துக்காட்டு - 2 தீமோத்தேயு 1:5.
4. நாள்தோறும் பைபிள் வாசிக்கக் கற்றுக்கொடு - சங்கீதம் 119:9.
5. ஜெபிக்கக் கற்றுக்கொடு - மத்தேயு 18:20.
6. தன் கைகளால் வேலை செய்யக் கற்றுக்கொடு - புலம்பல் 3:27.
7. ஆவிக்குரியவைகளுக்கு முதலிடம் கொடுக்கச் சொல் - 1 தீமோத்தேயு 4:8.
8. பெரியோர்களை மதிக்கக் கற்றுக்கொடு - 1 பேதுரு 5:5.
9. தாய்மையின் மேன்மையை உணர்த்து - 1 தீமோத்தேயு 5:25.
10. சபை வழிபாட்டுக்கும், ஆவிக்குரிய கூட்டங்களுக்கும் ஒழுங்காகச் செல்வதில் முன்மாதிரியாக இரு - எபிரெயர் 10:25.
11. நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய கற்றுக்கொடு - ரோமர் 13:1.
12. நன்னடத்தை நற்பயனைத் தரும் என்பதை விளக்கிச் சொல் - ரோமர் 12:17.

# கெத்செமனேயில் இயேசுவும் சீடர்களும்

## இரண்டு படங்களுக்குமிடையே உள்ள 5 வேறுபாடுகளை கண்டுபிடிக்கவும்.





விடைகள்: 1. இயேசுவின் ஆடை, 2. தீப்பந்தம்,
3. தலையிலுள்ள துணி, 4. மனிதர், 5. முயல்

# விடுகதைகள்

1. யானைக்கு அடி சறுக்கும்; இவனுக்கோ முடி சறுக்கும் - அவன் யார்?
2. உயரத்தை உரசிப் பார்த்தான், அழகை அலசிப் பார்த்தான், இஸ்ரவேலில் சிறந்து நின்றான், பதவியைக் கண்டு ஒளிந்து கொண்டான். அவன் யார்?
3. காய்க்காமல் பழுத்திடும், கசக்காமல் இனித்திடும், பலவண்ணப் பழங்களை பலருக்கும் தந்திடும், நித்திய வாழ்வை நீ அடைய நித்தமும் இது தேவை - அது என்ன?
4. கூட்டிப் பார், கழித்துப் பார்; முட்டிப் பார் மோதிப் பார்; புத்தியிருந்தால் கணக்குப் பார்; முயன்று நீயும் தப்பிப் பார் - அது என்ன?
5. ஆறடி தேக்கு மரம், அரசம் பழம் பட்டு தொப்பென்று விழுந்தது - அது யார்?
6. ஓடும் நீரின் ஓரத்தில் ஓங்கி உயர்ந்த நாணலில், ஒளிந்து கிடந்தது முத்து சிப்பி, சிப்பிக்குள் இருந்தது ஒரு முத்து. அந்த முத்து யார்?
7. திருதிருவென முழித்தான்; திருட்டுதனமாய் எடுத்தான்; மடமடவெனத் தோண்டினான்; மண்ணிற்குள் புதைத்தான்; கற்கள் பார்த்து சிரிக்க, கல்லால் எரிந்து கொல்லப்பட்டான் - அவன் யார்?
8. உயிருக்கு பயந்து ஓடி, அடைக்கலப் பட்டணம் தேடி, உப்புத்தூணாய் மாறி, நின்ற பொண்ணு யாரு?
9. இரண்டெழுத்து பெண், மூன்றெழுத்து ஆணை மணந்து, ஓபேதை பெற்றாள் - அவள் யார்?
10. பிடித்தால் ஆடுவான்; வாசித்தால் அடங்குவான்; பாடினால் முறைப்பான்; உயிர்காத்த மருமகனின் உயிரைப் பிடுங்க நினைத்தான் - அவன் யார்?
11. கடன் அன்பை முறிக்கும் என்று கடன் கொடுக்க தயங்கும் போது, கர்த்தருக்கே கடன் கொடுப்பான், கனிவு நிறைந்த மனிதன் இவன் - அவன் யார்?
12. பாம்புகளின் தலைவன், பாலைவனத்தில் பிறந்தான், பார்த்தவன் பிழைத்தான், பாராதவன் மரித்தான் - அவன் பெயர் என்ன?

**விடைகள்:**

1. சிம்சோன் - நியாய 16:16-21
2. சவுல் - 1 சாமு 9:1; 10:22
3. ஆவியின் கனிகள் - கலா 5:22,23
4. 666 - வெளி 13:18
5. கோலியாத் - 1 சாமு 17:4,49
6. மோசே - யாத் 2:1-10
7. ஆகான் - யோசு 7:16-26
8. லோத்தின் மனைவி - ஆதி 19:12-26
9.ரூத் - மத் 1:5
10. சவுல் ராஜா - 1 சாமு 18:10,11
11. ஏழைக்கு இரங்குகிறவன் - நீதி 19:17
12. நிகுஸ்தான் - 2 இராஜா 18:4

# கேட்டாரே ஒரு கேள்வி Q&A

**தன்னை வணங்குங்கள் என்று இயேசு பைபிளில் சொல்லியிருக்கிறாரா? இயேசுவை வணங்க வேண்டும் என்பதற்கான வேதாகம குறிப்புகள் ஏதேனும் உள்ளதா? எனது ஐயத்தை தெளிவாக்கவும்.**

**- ரேவதி பின்டோ, ஊரப்பாக்கம்**

இயேசு செய்த அற்புதத்தை கண்ட சீமோன் பேதுரு, இயேசுவின் பாதத்தில் விழுந்து, ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப்போகவேண்டும் என்றான். -லூக்கா 5:8

அவர் ஒரு பட்டணத்தில் இருக்கையில், குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன் இயேசுவைக் கண்டு, முகங்குப்புற விழுந்து ஆண்டவரே, உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும் என்று அவரை வேண்டிக்கொண்டான். -லூக்கா 5:12

(பிறவிக் குருடனாயிருந்து இயேசுவால் கண் பார்வை பெற்றவன், அவரிடம் வந்து) ஆண்டவரே, (உம்மை) விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டான். -யோவான் 9:38

இயேசு இருந்த இடத்தில் மரியாள் (என்ற சீஷி) வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்தாள் -யோவான் 11:32

கடைசியாக அப்போஸ்தலன் யோவானைக் குறித்து சொல்கிறேன். இவன் இயேசுவின் மிகவும் பிரியமாய் இருந்த சீஷன். அவருடைய மார்பில் சாய்ந்து கொள்ளும் அளவுக்கு நெருக்கமான சீஷன்.

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின் அவரை குறித்து சாட்சி கொடுத்த காரணத்தினால், பின் நாட்களில் பத்மு எனும் தனித் தீவில் சிறை வைக்கப்பட்டிருந்தான்.

அப்போது இயேசு அவனுக்கு தரிசனமானார். அதுவரை இயேசுவை நெருக்கமாய் கண்டிருந்த அவன், அந்த தரிசனத்தில் அவருடைய மகிமையின் தோற்றத்தைக் கண்டு பிரமித்து போய் இப்படி எழுதுகிறான்.



அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன். திரும்பின போது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும், அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்.

அவருடைய சிரசும், மயிரும் வெண்பஞ்சைப் போலவும், உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது. அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தது,

அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது. அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது.

தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார். அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது. அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது.

நான் அவரைக் கண்ட போது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன். அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என் மேல் வைத்து, என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்.

மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் ஆமென், நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன், என்றார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:12-18).

இயேசு மனுஷருக்கான பாவம் நிவர்த்தி பலியாகி, இரத்தம் சிந்தி மரித்து, தேவனால் உயிரோடே எழுப்பப்பட்டார்.

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,

பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலிப்பியர் 2:8-11).

இயேசுவே, மனுஷரின் வணக்கத்திற்குரிய ஒரேயொருவர்.

உழவு மாடுகள் இல்லையேல் விளைச்சலும் இல்லை;
வலிமைவாய்ந்த காளைகள் மிகுந்த விளைச்சலை உண்டாக்கும்.




மேற்கண்ட பொருளை உணர்த்தும் வசனம் வேதத்தில் எங்கேயுள்ளது? என்பதை கண்டறியவும்.

# நம்ம பஞ்சாயி

இயேசு, யூதர்களின் வன்மத்துக்குப் பலியானார். ரோமர்களின் கொடூர மரண தண்டனையான சிலுவை மரணம் அவர் மேல் திணிக்கப்பட்டது. கொடும் பாவம் செய்பவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனை, பாவமே அறியாத இயேசுவின் மேல் சுமத்தப்பட்டது. அவர் சிலுவையில் உயிர்விட்டார்.

ரோமர்கள் கைதிகளைச் சிலுவையில் அறைந்து அப்படியே சாகட்டும் என விட்டு விடுவார்கள். அறையப்பட்டவர்கள் மரணத்துக்காகப் போராடுவார்கள். வாழ்வு அவர்களுக்கு சாபமாகவும், சாவு அவர்களுக்கு வரமாகவும் இருக்கும். உடலெங்கும் காயத்தோடு தொங்கும் அவர்களைப் பார்க்க யாரும் வரமாட்டார்கள். கைதிகளுக்குத் தெரிந்தவர் என காட்டிக் கொண்டால் அவர்களுக்கும் சிக்கல் வரும் எனும் பயமே அதன் காரணம்.

சிலுவையின் மீது உடல்கள் பல நாட்கள் கூட குற்றுயிராய்த் தொங்கும். பறவைகள் வந்து உடலின் காயங்களைக் கொத்தும். சதையைப் பிய்த்துத் தின்னும். சிலுவை மிக உயரத்தில் இருக்காது. தரையிலிருந்து ஒரு அடி, ஒன்றரை அடி உயரத்தில் தான் உடல்கள் தொங்கும். எனவே விலங்குகளும் வந்து கைதிகளைக் கடித்துத் தின்னப் பார்க்கும். பெரும்பாலும் கைதிகளை நிர்வாணமாகவே தொங்க விடுவார்கள், எனவே அவமானம் இன்னொரு புறம் கொத்தித் தின்னும். இப்படிப்பட்ட கொடிய சாவு யாருக்குமே வரக்கூடாது என பார்ப்பவர்கள் நினைப்பார்கள். அதற்காகத் தான் ரோமர்கள் கைதிகளை உயரமான இடத்தில், எல்லோரும் பார்க்கும் இடத்தில் படத்தைப் போல அறைந்து தொங்கவிட்டுவிட்டுச் சென்று விடுவார்கள்.



இயேசுவும் அத்தகைய ஒரு கொடுமையான சூழலில் தான் உயிர்விட்டார். இப்போது உடலை கீழே இறக்கி அடக்கம் செய்ய வேண்டும். ரோமர்களைப் பொறுத்தவரை உடலை கீழே இறக்க வேண்டும் என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல. பல நாட்கள் சிலுவையிலேயே கிடந்தாலும் அவர்களுக்கு பிரச்சினை இல்லை. ஆனால் யூதர்களுக்கு அப்படியல்ல. மரத்தில் உடல்கள் இரவு முழுதும் தொங்கலாகாது எனும் சட்டம் உண்டு. எனவே மாலைக்குள் கீழே இறக்கி அடக்கம் செய்தாக வேண்டும். இயேசு இறந்தது பாஸ்கா காலம். மறு நாள் ஓய்வு நாள், ஓய்வு நாளில் வேலை ஏதும் செய்யவும் கூடாது. பாஸ்கா ஆயத்தத்துக்காக தூய்மை காக்க வேண்டும். அடுத்த நாள் என்பது முந்தின நாள் மாலை 6 மணிக்கே வேறு தொடங்கிவிடும்.

இயேசுவின் உடலைக் கேட்க யாரும் இல்லை! சொந்தக்காரர்கள் எல்லாம் கலிலேயாவில். எருசலேமில் யாரிடமும் கல்லறை இல்லை. இயேசுவுக்குத் தெரிந்தவர் என காட்டிக் கொண்டால் சிக்கல் வருமோ எனும்

பயத்தில் எல்லோரும் ஒளிந்து விட்டார்கள். சிலுவை தண்டனை பெற்ற கைதிகளைப் பொதுவாக அவர்களின் மூதாதையரோடு அடக்கம் செய்ய மாட்டார்கள். இப்படி இடியாப்பச் சிக்கலாய் இருந்த சூழலில் தான் இயேசுவின் உடலை விரைவாகக் கீழிறக்க பிலாத்துவிடம் அனுமதி கேட்டர் அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு.

அவர் சென்கத்ரின் உறுப்பினர். தலைமைக்குருவை தலைவராகக் கொண்ட யூதர்களின் உயரிய குழு அது. இயேசுவின் மரண தண்டனையின் போது யோசேப்பு அங்கே இருந்தாரா தெரியாது. இருந்திருந்தாலும் ஒரு குரலைக் கூட எழுப்பாமல் அமைதி காத்திருந்தார். அங்கே அவரை அச்சம் பிடித்திருக்கலாம். ஆனால் இங்கே துணிச்சலாக பிலாத்துவிடம் போய் உடலை இறக்க அனுமதி கேட்டார். பிலாத்துவும் அனுமதி அளித்தார்.

இந்த அரிமத்தியா ஊர் யோசேப்புவைப் பற்றி பல கதைகள் உண்டு. அதில் ஒரு கதை சுவாரஸ்யமானது. அந்த கதையின் படி அவர் டின் வியாபாரி. தென்மேற்கு இங்கிலாந்துப் பகுதியில், யூதர்களின் விற்பனைப் பகுதி ஒன்று உண்டு அங்கே விற்பனைக்காகச் செல்வார். நல்ல செல்வச் செழிப்புடையவர். சிறுவனாய் இருந்த இயேசுவை ஒரு முறை தன்னோடு அங்கே கூட்டிச் சென்றார். காரணம் அவர் அன்னை மரியாளின் நெருங்கிய உறவினர். என விரிகிறது அந்தக் கதை. 'இயேசுவின் உறவினர்' எனும் உரிமையில் தான் பிலாத்துவிடம் சென்று பேசி இயேசுவின் உடலைப் பெற்றுக் கொண்டார் என சொல்பவர்களும் உண்டு.

இன்னொரு கதையில் கிபி 61ல் பிலிப்பு அவரை நற்செய்திப் பணிக்காக இங்கிலாந்துக்கு அனுப்பினார். அப்போது அவர் தன்னுடன் ஒரு கிண்ணத்தை எடுத்துக் கொண்டு போனார். அது இயேசு இறுதி இரா உணவில் பயன்படுத்திய கிண்ணம். அதில் சிலுவையிலிருந்து வடிந்த இயேசுவின் இரத்தத்தைப் பிடித்து வைத்திருந்தார் என ஹோலி கிரைல் இன்னொரு கதையாய் விரிகிறது.

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு இயேசுவின் உறவினராய் இருந்தாரா இல்லையா என்பது தெரியாது. ஆனால் அவர் இயேசு வாழ்ந்த காலத்தில் மறைவாய் இருந்தார். இயேசுவுக்காக வாதிடவும் இல்லை, இயேசுவோடு உரையாடவும் இல்லை. ஆனால் இயேசு மறைந்தபின் அவருக்கான இறுதிச் சடங்குகள் செய்ய துணிச்சலாய் வருகிறார். தன்னுடைய கல்லறையை அவருக்காய் விட்டுக் கொடுக்கிறார். வாழும்போது இந்தத் துணிச்சல் இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? சென்கதரின் சபையில் அவரது குரல் ஓங்கி இயேசுவுக்காக ஒலித்திருந்தால் எப்படி இருந்திருக்கும்!! ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. இறந்தபின் விருது வழங்கி பாராட்டுப் பத்திரம் வாசிக்கும் கூட்டத்தில் சேர்ந்து கொண்டார்.

இல்லை, ஒருவேளை அதுவும் இறைவாக்கு நிறைவேறுதலின் ஒரு அம்சமாய் இருக்கலாம். இயேசு சொன்னார், நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்'' அப்படியானால், இயேசு சிலுவையிலிருந்து உயர்த்தப்பட்டபோது யோசேப்புவையும் தன்பால் ஈர்த்துக் கொண்டாரா? மலையின் உச்சியில் ஒரு நூற்றுவர் தலைவன் இருந்தார். அவர் இயேசுவின் மரண நிகழ்ச்சியைப் பார்த்து, 'இவர் உண்மையிலேயே இறைமகன்' என சான்றளித்தார். அவரையும் இயேசு தன்பால் ஈர்த்துக் கொண்டாரா?

சிலுவையில் அறையப்பட்டு, உயர்த்தப்பட்ட இயேசு

நம்மை ஈர்த்துக் கொண்டாரா?

பார்வையாளராய் அல்ல, பங்காளராய்.

# என்று காண்போம் சமநிலை?



படைத்தான் உலகத்தை
பாவிகளை உருவாக்க அல்ல!
பாதியில் நிறுத்திடவும் அல்ல,
பக்குவமாய் பரலோகம் ஆக்கிடவே!!

ஏவாளில் தொடங்கிய பாவம்
எதுவரை தொடரும்?
அற்பநேரத்தில் அறிவை ஆதாம் இழந்ததால்
என்றும் தொடரும் ஆக்கினைகள்!



வேதம் தந்த போதனை நியாயப்பிரமாணம்
அதனையே பாவிகள் மத்தியில்
பக்குவமாய் வாழ்ந்து காட்டினார்
எங்கள் இயேசுபிரான்

சிலுவை சொன்ன பாடம்
நம் பாவங்கள் நீங்கவே,
பாதாளத்தில் விழ அல்ல!

விருட்சமாய் படர்ந்து வளர்கிறது
பாவிகள் சாம்ராஜ்ஜியம்.
நியாயப்பிரமாணமும், பாவத்தின் சம்பளமும்
நீதித் தராசினிலே தள்ளாடுகின்றன!

# வாக்கே வாழ்வாக

கூன் விழுந்த முதுகு; குழி விழுந்த கண்கள்; சுருங்கிப் போன சாத்துகுடியாய் முகம்; சாதாரண புடவைகள் மூன்றும் ஐந்து ரூபாய் பணமும் தவிர வேறு சொத்து சுகம் ஏதும் கிடையாது! ஐந்து அடிக்கும் குறைவான உயரம். இவ்வளவு 'அழகான' பெண்ணுக்கு உலகத் தலைவர்களுக்குச் சமமான - ஏன், அதற்கும் மேலான - மதிப்பு மரியாதை! உலகம் நெடுக இருந்து பலப்பல விருதுகள்! பட்டங்கள், பரிசுகள்... ஏன்... ஏன்? ஏன்!...

ஏனென்றால் அவர் நம் கண் முன்னே வாழ்ந்து காட்டிய வாழ்க்கை வேதாகம மதிப்பீடுகளின் வெளிப்பாடாக அமைந்ததுதான்.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு (திருக்குறள் 819) என்பார் திருவள்ளுவர்.

Our dees do not match our words என்று நம் இந்தியத் தத்துவ ஞானி Dr. இராதாகிருஷ்ணன் எழுதுவார். இப்படிச் சொல் வேறு செயல் வேறு என்று வாழ்ந்து காட்டிக் கொண்டிருந்த பரிசேய நரிக்கூட்டத்தைக் கண்டிக்கும் எம்பெருமான் இயேசு,

''தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்'' (மத்தேயு. 23:12) என்கிறார்.



ஆனால் அன்னை தெரேசாவோ இயேசு கிறிஸ்து சொன்னதைப் போல வாழ்ந்தவர்; அவர் செய்ததைச் செய்து வாழ்ந்தவர்! கிறிஸ்துவாகவே வாழ்ந்தவர்! எனவே அன்னையே உண்மையான கிறிஸ்துவர்! இப்படி அவர் வாழ்ந்து காட்டிய வேதாகம விழுமங்களை, மதிப்பீடுகளைக் காண்போம்.

1946-ஆம் ஆண்டு செப்டம்பர் 10-ஆம் தேதி, இந்தியாவின் டார்ஜீலிங் நகருக்கு ரயில் பயணம் மேற்கொண்டிருந்த போது 'சேரிகளுக்குச் செல், சேவைகளைச் செய்'' என்ற இறைவனின் குரல் இதயத்தைத் தட்டுவதை உணர்ந்தார். இந்த இடத்தில் வேதாகம விழுமங்கள் இரண்டை நினைவு கூறுதல் வேண்டும். வேதாகம விழுமங்களில் தலையாக விளங்குவது கீழ்ப்படிதல்.

கீழ்ப்படியாமையால் தம் மேல் நிலையை இழந்த ஆதாம் ஏவாள் கதையை நாம் நன்கு அறிவோம். மாறாக, 'இதோ ஆண்டவரின் அடிமை' என்று சொல்லிக் கீழ்ப்படிந்ததனால் மரியாள் பெற்ற மாண்புகளையும் நாம் அறிவோம். ''வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; தாழ்மையானவர்களை உயர்த்தினார்'' என மரியாள் அன்று உரைத்தது அன்னை தெரெசாவுக்கு அப்படியே பொருந்துகிறது.

தேவகுமாரன் இயேசு விளக்கிய விழுமங்களில் மிக முக்கியமானவை இரண்டு : தேவ அன்பும் பிறர் அன்பும் தாம் அவை. ''உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக (லூக் 10:27).

நியாயப்பிரமாணம் வலியுறுத்தும் பொன் விதிகள் இவற்றையே இயேசுவும் வலியுறுத்துகிறார். இவை இரண்டையும் தம் கண்களாகப் பாவித்தவர் அன்னை தெரெசா!

தேவன் மீது வைக்கும் அன்பினைப் பக்தி என்பர்; அயலவர் மீது செலுத்தும் அன்பினை மனிதநேயம் எனவும் அழைக்கலாம். வேதாகமம் வலியுறுத்தும் மாண்புகளில் இந்த தேவ பக்தி ஒன்று, மனிதநேயம் மற்றொன்று. தேவகுமாரன் இயேசுவின் நோக்கில் இந்த இரண்டுமே முதலிடம் பெறுகின்றன. ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. இதனால்தான் ''எல்லா நோயாளர்களையும் அவர் குணமாக்கினார். இவ்வாறு, 'அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார்; நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்' என்று ஏசாயா தீர்க்கதரிசி உரைத்தது நிறைவேறியது'' என மத்தேயு 8:16ஆம் வசனத்தில் குறிப்பிடுகிறார்.

''கண்ணால் காணும் அயலாரை நேசியாதவன் கடவுளை நேசிக்க முடியாது''. அன்னையின் அடிப்படைக் கருத்து இதுவே. ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்று ஏழைகளுக்குத் தொண்டு செய்யத் தன் வாழ்வை அன்னை அர்ப்பணித்ததற்குக் காரணம் இயேசு கிறிஸ்து எடுத்துக் கூறும் விழுமியமே!

இயேசு கிறிஸ்து காலத்தில் இருந்து இன்று வரை தொழுநோயாளிகளின் நிலை பரிதாபமாகவே, கேவலமாகவே இருந்து வந்துள்ளது. அதனால்தான் அவர் அவர்கள் மேல் பரிவு இரக்கம் காட்டி அவர்களைக் குணப்படுத்தி அனுப்புகிறார். அவரைப் போலவே செயல்பட்டவர் அன்னை தெரெசா. சொந்தங்களாலும் பந்தங்களாலும் துரத்தப்பட்டு சபிக்கப்பட்டவர்கள் என வெறுக்கப்பட்டுப் புழுதியிலே புரளும் தொழுநோயாளிகளை அருவருக்காமல் தொட்டுத் தழுவிக் காயங்களைக் கழுவிக் கட்டிட்டு மனப் புண்ணுக்கும் நல்ல வார்த்தைகளால் மருந்திட்டு மனிதநேயத்தைக் காட்டியவர் அன்னை தெரெசா. எப்படி இது சாத்தியம்? தொழுநோயாளிகளைத் தொடுவது அருவருப்பாக இல்லையா? என்று அன்னையிடம் கேட்கிறார்கள். ''சிதைந்து போன உடல்களில் குழந்தைகளில் மரிப்பவர்களில் இயேசுவை அடையலாம் என்பதை புரிந்துகொள்வதால் இப்பணி சாத்தியம் ஆகிறது'' என்று சிரித்துக்கொண்டே அன்னை பதில் கூறினாராம்.

மேலும், இயேசு, ''என் நுகம் அழுத்தாது; என் சுமை எளிதாயுள்ளது'' என்கிறார். இயேசுவுக்காக, இயேசுவுக்கே பணி செய்கிறோம் என்பதை ஊட்டும் வேதாகம மதிப்பீடுகள் இல்லாமல் இது சாத்தியம் ஆகாது என்பதை அன்னையின் பதில் உணர்த்துகிறது.

மக்களை மதம் மாற்றவே அன்னை தெரெசா சேவைகள் செய்தார் என அநியாயமாகப் பழி சுமத்துபவர்களும் உண்டு. ஆனால், எவரையும் மதம் மாற்ற அன்னை முயன்றதே இல்லை. மாறாக, தன் நற்செயல்கள் மூலமாகவே நற்செய்தியைப் பரப்பியவர் இவர் என்பதில் ஐயம் இல்லை.


Elim GRC
27 வது
பெண்கள்
அக்கினி
அபிஷேக
முகாம்
Sis. Nalini Selvaraj
Sis. Stella Dhinakaran
Dr. Preetha Judson
ஜூன் 2023
15,16,17
9AM - 2 PM
வியாழன், வெள்ளி, சனி
பாவமா
வியாதியா
கவலையா
கண்ணீரா ?
வாருங்கள்,
அற்புத விடுதலையைப்
பெற்றுக்கொள்ளுங்கள் !
Sis. Parimala Samuel
Worship
Sis. Hema John
Pas. Osborne Jebadurai
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-600024.
9884908777, 9003067777, 9884916777

அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும்
அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது.
அப்போஸ்தலர் 5:12

திருப்பத்தூர்

FRI 28
SAT 29
SUN 30
JULY 2023

# வது 2 அற்புத அடையாளங்கள் முகாம்

SIGNS AND WONDERS CAMP



நேரம்
வெள்ளி காலை
6 மணி
முதல்
ஞாயிறு மதியம்
1 மணி வரை






PS. OSBORNE *Jebadurai*
BRO.VINCENT *Selvakumar*
BRO.T.STEPHEN
BRO. EBENEZER *Paul*

SCAN HERE

## அனிறனிறுள்ள அப்பம் ஜெப மண்டபம்

கிறிஸ்துகுல ஆசிரமம் திருப்பத்தூர் மாவட்டம், வேலூர் அருகில்
திருப்பத்தூர் மாவட்டம் 9884908777, 9003067777